# "மக்களை கடவுள்தான்....

இதேவேளை, இந்து பத்திரிகைக்கு பேட்டியளித்திருந்த சிறீலங்கா ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தான் கடவுள் நம்பிக்கை உள்ளவன் என்றும் யாரோ ஒருவர் தம்மைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறார். விஷ்ணுவின் பார்வை இருந்தால் ஒருவரும் தீங்கு செய்ய முடியாது என்கிறார்கள். அதனால் நாட்டின் நலனுக்காக திருப்பதிக்கு சென்றேன் என்று கூறியுள்ளார். பௌத்த மதத்தவர்கள் எல்லாம் இந்துக் கோவில்களில் போய் வழிபாடு செய்கின்றபோதும், தாம் கைப்பற்றிய நிலங்களில் எல்லாம் பௌத்த விகாரைகளையும், பௌத்த சின்னங்களையும் அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சரத் பொன்சேகாவின் விடுதலைக்கு ஆசி வேண்டி தலதா மாளிகையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பூசைக்கு மகிந்த அரசால் தடை விதிக்கப்பட்டது. இந்த விசேட பூசையை பௌத்த இளைஞர் சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். எனினும், பூசையை நடத்த வேண்டாம் என பூசை ஏற்பாட்டாளர்களிடம் காவல்துறையினர் பகிரங்கமாக வலியுறுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் பொது பூசைகளை நடத்துவதற்கு யாருடைய அனுமதியையும் கோர வேண்டிய அவசியம் இல்லை என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்த போதும், அதனை மேற்கொள்ளவிடாது காவல்துறையினர் தடுத்துள்ளனர். இந்த நிலையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பூசை தலதா வீதியிலேயே மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படுகிறது. இதில் சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகாவும் கலந்து கொண்டிருந்தார்.

# இந்திய அரசின் நெறிப்படுத்தலில்...

புதுடில்லிக்கு செல்லாததற்கான காரணம் என்ன? எங்களால் இந்தியாவுக்கு சென்று அங்குள்ள முக்கிய பிரதிநிதிகளைச் சந்திக்க முடியுமாக இருந்தால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஏன் அந்த முயற்சியை எடுக்கவில்லை? இதிலிருந்து இந்திய அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்பவே இவர்கள் செயற்படுகிறார்கள் என்பது புலனாகிறது. அதுவரை இந்திய அரசாங்கத்திடம் எதுவும் கோராதவர்கள் 2009ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சந்திப்புக்கான கோரிக்கை விடுத்தார்கள். அதற்காக எமது உறுப்பினாகள் 14 பேர் கூடினார்கள். இவர்களில் 13 பேர் அங்கு போகக் கூடாது என எதிர்த்தார்கள். இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் புதுடில்லிக்குச் சென்றனர். நான் இலண்டனிலிருந்து அவசரமாக வந்து, இந்தியா துரோகமிழைக்கிறது, செல்ல வேண்டாம் எனச் சொன்னேன். இந்த வேண்டுகோள் எனக்கூடாக விடுதலைப் புலிகளால் இவர்களுக்கு விடுக்கப்பட்டது. புலிகளால் நேரடியாகவும் கூட அவர்களுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால் அதனையும் மீறிச் சென்றார்கள் என்றால் அதற்கான காரணத்தை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். இந்திய பொதுத் தேர்தலிலே தமிழ்நாட்டில் கொங்கிரஸ் கட்சியை வெற்றிபெறச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட ஏமாற்று முயற்சிகளிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பகடைக்காயாகப் பாவிக்கப்பட்டது. இவர்களும் அதில் விரும்பி கலந்து கொண்டார்கள் என்பதுதான் எங்களுடைய பகிரங்க குற்றச்சாட்டு. இதைப்பற்றி வேண்டிய நேரத்தில் வாதாடவும் தயாராகவுள்ளோம்' என்றார் சிவாஜிலிங்கம்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீகாந்தா உரையாற்றுகையில், 'சோனியா அரசுக்கு விசுவாசமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு இருக்க வேண்டும் என இந்தியா விரும்புகிறது. கிளர்ச்சியாளர்கள், தட்டிக்கேட்பவர்கள், இந்தியாவின் துரோகத்தைப் பற்றி கடந்த காலத்தில் பேசியவாகள் இருக்கக் கூடாது என்பதில் சோனியா கொங்கிரஸ் அரசாங்கம் தீர்மானமாக இருக்கிறது' என்றார். தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் திங்கட்கிழமை கொழும்பு நிப்பொன் விடுதியில் நடந்த இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன பார்வையாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுஇவ்வாறிருக்க, இந்தியாவின் நடவடிக்கைகளைத் தகர்க்கும் வகையில் மகிந்த ராஜபக்ச தனது காய்களை நகர்த்தி வருவதாக தெரியவருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் எவரும் வெற்றிபெறாமல் செய்வதற்கு சிறீலங்கா ஜனாதிபதி புதிய வியூகங்களை வகுத்துள்ளதாக கூறப்படுகின்றது. பல்வேறு சுயேச்சைக் குழுக்களையும் கூட்டமைப்பு வேட்பாளர்கள் போட்டியிடும் பகுதிகளில் களமிறக்கி வாக்குகளை சிதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள மகிந்த முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இறுதியாகக் கிடைத்த தகவல்களின்படி அகில இலங்கை தமிழ் கொங்கிரஸ் கட்சி பொதுத் தேர்தலில் தனித்துப் போட்டியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பொதுச்செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை முதன்மை வேட்பாளராகக்கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரகுமார் உட்பட பிரபலமான புத்திஜீவிகளும் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, யாழ். மாவட்டத்தில் சுயேட்சைக் குழுக்களாகப் போட்டியிடவுள்ளவர்களையும் அகில இலங்கைத் தமிழ்க் கொங்கிரசுடன் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவை சாதகமான நிலையிலேயே காணப்படுவதாகவும் தெரியவருகிறது. இது இவ்வாறிருக்க வன்னி மாவட்டத்தில் பிரபல சட்டத்தரணிகள் நால்வர் உட்பட்ட சிலர் அகில இலங்கை தமிழ் கொங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிடவுள்ளனர்.

# ஈழத்தமிழர் மீதான இனஅழிப்பு.......

எவை எப்படி நோக்கப்பட்டாலும், 2009-ல் வன்னியில் அப்பாவித் தமிழ் மக்கள்மீது, நடத்தப்பட்ட படுகொலை, ஓர் இனஅழிப்பின் உச்சக்கட்டத் தூண்டுகோள் எனக்கொள்ளலாம்.

30 ஆண்டுக் காலமாக, ஊரடங்குச் சட்டம் பிறப்பித்து, வடக்கு-கிழக்கு மாகாண மக்களைத் தொடர்ந்து உயிர் அச்சத்தில் (Life threat) வாழும்படி செய்ததன் மூலம் உளவியல் ரீதியாக தமிழர் மீது சிங்கள அரசு தனது இனஅழிப்புத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றது. போர் முடிந்து 10 மாதங்களாகியும், புதிய அதிபர் தேர்தல் முடிந்த பிறகும்கூட, தமிழர் வாழும் பகுதியில், இராணுவத் தங்கல் கெடுபிடிகள் தொடர்வதும், நெருக்கடி நிலை நீடிக்கப்பட்டிருப்பதும் திட்டமிட்ட தமிழினஅழிப்பை உறுதிபடுத்துகிறது.

நியூயோர்க் தொண்டு நிறுவனம் ஒன்று, Dream for Darfur' என்னும்



சேவைப் பணியின்போது, இனப்படுகொலை தடுப்புத் திட்டம் எனத் தயாரித்து அளித்துள்ள அறிக்கையில் (டிசம்பர், 2008), உலகில் இனப்படுகொலை நடைபெற்று வரும் 8 நாடுகளில், கொங்கோ, சூடான், இலங்கை ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளதையும், அந்நாடுகளில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இனப்படுகொலைகளால் அப்பாவிப் பொதுமக்கள் பெருமளவில் கொடுமைக்கு ஆளாகிவருகின்றனர் எனத் தெரிவித்துள்ளது.

***ஐ.நா.வின் நிலை:***

தொடர்ந்து நடத்தப்படும் இவ்வின அழிப்புத் திட்டத்தை, ஐ.நா.சபை தலையிட்டு உடனே நிறுத்தியாக வேண்டும். முழுத் தமிழினமும் அழியும் வரை ஐ.நா.வோ, தமிழினமோ பொறுத்திருக்க முடியாது.

***சர்வதேச சமூகம்:***

வன்னியில் இருக்கும் தடுப்பு முகாம்களில் இருக்கும் தமிழ் மக்களை, அங்கிருந்து அரசாங்க கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் இன்னொரு தடுப்பு முகாமிலோ அல்லது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பிரதேசத்திற்கோ குடியமர்த்துவது, இப்போது நடைபெறும் இன அழிப்புத் திட்டத்தை மீண்டும் நீடிக்கும் ஒரு செயலாகும். இதனை நிறுத்த சர்வதேசச் சமூகம் ஈழத்தமிழர்தம் பழைய வாழ் விடங்களில் தக்க நிவாரண உதவிகளுடன் மீண்டும் குடியமர்த்தப்பட உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். எனவே, ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுத வலுவுடனேயோ அல்லது தமிழ் மக்களின் ஆயுதப்போராட்ட வலுவுடனேயோ ஒரு சக்தி தடுத்து நிறுத்தாத பொழுது, இவ்வின அழிப்புத் திட்டமானது, மீண்டும் மீண்டும் தொடர்ந்து நடைபெறும் என்பதில் ஐயமில்லை.

செயத்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும். குறள்: 466

# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் .....

நீங்கள் அப்படிப் பார்ப்பதாக இருந்தால் தேசியத் தலைவருடைய இலட்சியத்திற்கும் நீங்கள் தீங்கு செய்கின்றீர்கள். இதுவரையிலே இன்னுயிரை நீத்த முப்பத்து மூவாயிரம் மாவீரர்கள் தமது இன்னுயிரைக் கொடுத்திருக்கிறார்கள். எதற்காகக் கொடுத்திருக்கின்றார்கள்? இதற்காக அல்ல அவர்கள் உயிர் நீத்தது. மாவீரர்களுடைய துயிலுமில்லங்களில் நாம் விளக்கேற்றக்கூட அந்த சிங்கள இனவெறி அரசானது ஒப்புக்கொள்ளவில்லை. எல்லா துயிலுமில்லங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கினார்கள். ஆனால், அவர்களின் எதிர்பார்ப்பு பொய்யாகியுள்ளது. எந்தக் காலத்திலும் மாவீரர் தினம் தமிழ்நாட்டிலே கொண்டாடப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் எப்பொழுது சிங்கள இனவெறி அரசானது ஈழத்திலே அந்த மாவீரர்களினுடைய துயிலுமில்லங்களை தகர்த்தி எறிந்தார்களோ அன்று விளக்கேற்றி வீரவணக்கம் செய்யக்கூடாதென்று அந்தச் சிங்கள இனவெறி அரசு தடுக்க நினைத்ததோ அந்த விளைவு உலகத்திலே இருக்கக்கூடிய 9 கோடி தமிழர்களது நெஞ்சிலும் அந்த மாவீரர்களிற்கு விளக்கேற்றி வீரவணக்கம் செலுத்தக்கூடிய ஒரு சூழல் வந்துவிட்டது. அதனுடைய எதிரொலிதான் தமிழ்நாட்டின் கிராமங்களிலே விளக்கேற்றி அஞ்சலி செய்து வீரவணக்கம் செலுத்தப்பட்டதை நாங்கள் கடந்த மாவீரர் நாளில் பார்த்தோம்.

அப்படி இருக்கும்பொழுது நீங்கள் யாருக்காகப் பயப்படவேண்டும்? எதற்காகப் பயப்பட வேண்டும். எனவே மீள்வாக்கெடுப்பு நாணயத்தினுடைய ஒருபக்கமென்றால், நீங்கள் நாடு கடந்த தமிழீழ அரசை அமைக்கும் பொழுது அதை இன்னொரு பக்கமாக எடுத்துக்கொண்டு நமக்குள்ளே வேற்றுமைகள், நமக்குள்ளே போட்டிகள் பொறாமைகள் இருந்தால் அவற்றை களையுங்கள். தயவு செய்து தலைவர் சொன்னதை மனதிலே வைத்துக்கொள்ளுங்கள், நீ பெரியவனா? நான் பெரியவனா என்று பார்ப்பதைவிட இன்று எல்லோரையும் விட நாடு பெரியது என்று பார்த்தால் நமக்குள்ளே எந்தப் பிசகும், எந்தப் பிரச்சினையும் வராது.

யார் பெரியது என்பது முக்கியமல்ல, மாவீரர்களுடைய உயிர்த் தியாகத்தை நினைத்துப்பாருங்கள். செத்து மடிந்திருக்கின்ற பொதுமக்களின் உயிர்களை நினைத்துப் பாருங்கள். அவர்கள் அத்தனைபேரதும், உலகத் தமிழர்கள் அத்தனை பேரதும் கனவும் தனித்தாயகத் தமிழீழ தனியரசு அமைப்பது தான். இதிலே எந்தவொரு பகுதியிலே சிறு குறை என்று வந்தாலும், அதற்கு யார் பொறுப்பானாலும், அதனை உலகத் தமிழினம் ஒருபோதும் மன்னிக்காது. இதை நீங்கள் மீள்வாக்கெடுப்பு நடாத்துகின்ற அவர்களோடு ஒன்று சேர்ந்து அவர்கள் நாடு கடந்த தமிழீழ தனியரசை அமைப்பதற்கு ஒன்றுபட்டுப்போவதுதான் நல்லது. இரண்டு அறிவுஜீவிகள் இருந்துகொண்டு ஒன்றையும் சாதித்துவிட முடியாது. மக்கள் குரலே மகேசன் குரல் என்ற அடிப்படையிலே வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் மீள்வாக்கெடுப்பிற்காக மக்கள் போகும்பொழுது அதனைக் கொச்சைப்படுத்துவது புலம்பெயர்ந்து வாழக்கூடிய தமிழ் மக்களிற்கு அவமரியாதை செய்வதாகத்தான் இருக்கும். ஆகவே இனிமேல் வருங்காலத்திலாவது ஒன்றுபட்டு செயற்படுவோம். நாம் எதிரிகளால் வீழ்த்தப்பட்டதைவிட, துரோகிகளால்தான் பலமுறை வீழ்ந்திருக்கின்றோம்.

நம்மிலேயே பலபேர்கள் நம்மைப்போல் பேசுவார்கள். நம்மைப்போல் நடப்பார்கள். ஆனால் நமக்கு எதிரான செய்திகளையே பரப்புவார்கள். அதுவும் சொல்லப்போனால் தலைவரைப்பற்றிய தவறான செய்திகளையெல்லாம் பரப்புபவர்கள் இருப்பார்கள். இன்னும் சொல்லப்போனால் எல்லாம் முடிந்துவிட்டது. இனிமேல் என்னத்திற்காக அதை இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கின்றீர்கள் என்றெல்லாம் சொல்லுவார்கள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஏனென்று சொன்னால் ஆயுதப்போராட்டம் முள்ளிவாய்க்காலிலே மௌனிக்கப்பட்டிருக்கின்றது.

தலைவரைப்பற்றி ஒரே ஒரு செய்தியை மட்டும் நான் சொல்கின்றேன். தலைவர் அவர்கள் எந்த அளவிற்கு விழிப்பானவர்கள். எந்த சர்வதேச உளவு நிறுவனங்களாலோ அல்லது எந்த அளவிற்கு அவருடைய இருப்பிடத்தையோ கண்டுபிடிக்க முடியாது என்று நான் சொல்லுகின்றேன். பாலாண்ணா ஒருமுறை கூட்டத்திலே பேசுகின்ற பொழுது தலைவருடன் பேசிவிட்டுவந்தேன் என்ற செய்தியைச் சொன்னபோது, கூட்டம் முடிந்தவுடனே ஆர்வம்மிக்க தம்பிமார்கள் கேட்டார்கள், தலைவருடன் பேசினீர்களா என்று கேட்டபொழுது பாலாண்ணா அமைதியாகச் சொல்கின்றார், அவர் எப்ப நேரடியாக தொலைபேசியில் கதைத்திருக்கிறார். நான் ஏதாவது கதைக்க வேண்டுமென்று செய்திசொன்னால், பொறுப்பானவரிடம் சொல்லுவேன். அவர் அந்தச் செய்தியை தலைவருக்குச் சொல்லுவார். பின் தலைவர் சொல்லும் பதிலை எனக்கு எடுத்து வந்து சொல்வார். இப்படித்தான் கதைப்பது. உங்களிற்கெல்லாம் தெரியாதா? இப்படித்தான் கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது.

இரா சுப்பர் மார்கட்
இலங்கை, இந்திய கனேடிய உணவுப் பொருட்கள், உடனுக்குடன் மீன் வகைகள், இறைச்சி, கோழி போன்ற தரமான பொருட்களை மலிவான விலையில். உயர்வான முறையில் பெற்றுக்கொள்ளலாம்.



இரா மக்கள் சந்தை
2607 Eglinton Ave. East Scarborough
Phone: 416.269.2622

வீட்டிற்கு வெளியே ஒரு வீடு - அப்பக் குடில்
HOPPER HUT
DINE-IN, TAKE OUT & CATERING
இலங்கை இந்திய, கனேடிய உணவு வகைகளிற்கு நாடுங்கள்
அப்பம், பிட்டு, இடியப்பம், தோசை மற்றும் நூடில்ஸ் மற்றும் சோறு, கறி, வடை, பற்றீஸ், கட்லட், றோல்ஸ் இன்னும் பல சுடச்சுடக் கிடைக்கும்
880 Ellesmere Road (at Kennedy) Unit 215, Scarborough
416.299.4311

சுவையகம்
TAKE OUT & CATERING
உங்கள் வீட்டில் இடம்பெறும் அனைத்து வைபவங்களுக்கும் வேண்டிய உணவுப் பொருட்கள், சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்
2950 BIRCHMOUNT ROAD. UNIT 3&4. SCARBOROUGH
TEL:416-491-8241 CELL:416-716-0543